முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம் மாவட்டம், (இருப்பு) செங்கல்பட்டு

| வழக்கு எண் | O.S. | 84 | of | 2013 |
|---|---|---|---|---|

நாள் 05.01.2021 - வா.சா. 1 திருமதி நித்யகல்யாணி

சாட்சி மீண்டும் முன்னிலையாகி பிரமாணம் செய்விக்கப்பட்டு தொடர்ந்து விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

இரண்டு சொத்துகளை பொறுத்து தாவாவை தாக்கல் செய்துள்ளேன். அந்த இரண்டு சொத்துகளும் தாத்தா ராஜகோபால நாயக்கர் என்பவருக்கு சொந்தமானதாகும். முதல் பிரதிவாதி என் தகப்பனார். தாத்தா உயிருடன் இருந்தபோது சொத்துகளை பொறுத்து அவரது மகள்களுக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றும், வழக்கு சொத்துகளில் பாகம் வேண்டும் என்றும் பரிகாரம் கோரி என் தந்தையான இந்த வழக்கின் முதல்பிரதிவாதி, தாம்பரம் சப்கோர்ட்டில் அசல் வழக்கு எண் 265/2006 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தந்தை ராமலிங்கம் மட்டுமே வாதி, தாத்தா ராஜகோபால் நாயக்கர் மட்டுமே பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கை என் அப்பா தாக்கல் செய்யும் முன்பாகவே, 17.06.2005 லேயே எனக்கு திருமணம் ஆகிவிட்டது. என் தகப்பனார் கொத்தனார் வேலை செய்தார், பெரிய அளவில் வருமானம் கிடையாது என்றால் சரிதான். அ அட்டவணை சொத்து மேடவாக்கம் விஜயநகரம் என்ற இடத்தில் உள்ளது. ஆ அட்டவணை சொத்தும் அதே பகுதியில் தான் உள்ளது. ஆ அட்டவணைசொத்து கிராம நத்தம் என்றால் சரிதான். ஆ அட்டவணை சொத்து 3168 சதுரடி கொண்டதை 26.02.2004லேயே என் தகப்பனார், என் தாயார் பெயருக்கு பதிவு செய்த ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அவ்வாறு செட்டில்மெண்ட் மூலும் சொத்தை பெற்ற என் தாயார், 4வது பிரதிவாதிக்கு 1751 சதுரடியை 24.02.2005-ல் கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். என் கணவர் பெயர் பெருமாள். என் கணவர் பெருமாளுக்கு ரியல் எஸ்டேட் தொழில் என்றால், முதலில் 2004 - 2005 காலத்தில் செய்து வந்தார், தற்போது ஆட்டோ ஓட்டி வருகிறார். என் கணவர் எனக்கு தூரத்து உறவினர் என்றால் சரிதான். என் தாயார், 4ம் பிரதிவாதிக்கு மேற்படி 1751 சதுரடியை கிரயம் செய்தபோது, என் கணவர் அதற்கு தரகராக இருந்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மூலமாக நான்காம் பிரதிவாதிக்கு என் தாயார் கிரயம் செய்த சொத்திற்கான கிரய பத்திரத்தில் என் கணவர் முதல்

சாட்சியாக கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். என் கணவர்தான் ஒருங்கிணைப்பாளராக இருந்து அந்த கிரயத்தை முடித்துகொடுத்தார் என்றால் தவறு, மீடியேட்டராக இல்லை, சாட்சியாகதான் கையெழுத்திட்டார். கிரயம் செய்தபோது உடன் சென்றதால் கையெழுத்து போட சொல்லி, ஒரு சாட்சியாக கையெழுத்திட்டார். ஒருவேளை வேறு நபர் இல்லாதபடியால் அவ்வாறு கையெழுத்திட்டிருக்கலாம். என் தாயார்தான் செய்தபோது என் கணவரையும் உடன் அழைத்து சென்றார். 4ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.5 மூலம் கிரயம் செய்தது போக மீதும் உள்ள இடத்தில் என் பெற்றோரான 1, 3 பிரதிவாதிகள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நானும் திருமணம் ஆகும் முன்புவரை ஆ அட்டவணை சொத்தில்தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-5 ல் கண்டுள்ள வரைபடத்தின்படி சொத்தின் தெற்கு பகுதியில் இருந்த தெருவில் இருந்து நான்கு அடி வழி விட்டு வடக்கு பக்கத்தில் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்து உள்ளது என்றால் சரிதான். 4ம்பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்த நாள் முதலாகவே 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் அந்த சொத்து இருந்து வருகிறது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரயம் செய்து கொடுத்த விவரம் உடன் அந்த சமயத்திலேயே 2005-லேயே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, 2013-ல்தான் எனக்கு அந்த விவரம் தெரிய வந்தது. அவ்வாறு பிற்பாடுதான் எனக்கு தெரிய வந்தது என்ற நிலையில் எந்த அடிப்படையில் 4ம் பிரதிவாதி 2005 முதலாகவே அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பதை கேட்டு அறிந்து கொண்டேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.5ல் சாட்சியாக கையெழுத்திட்ட என் கணவரும் எங்கள் சொத்தின் பின்புறம் உள்ளஇடத்தை 4ம் பிரதிவாதிக்க கிரயம் செய்துகொடுத்த விவரத்தை எனக்கு கூறவில்லை, பின்னிட்டு நான் வில்லங்கம் போட்டு பார்த்போதுதான் அந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. என் திருமணத்தின்போது என் பெற்றோர் எனக்கு பத்து சவரன் நகை போட்டார்கள். என் திருமணத்திற்கு ரூபாய் மூன்று லட்சம செலவிடப்பட்டு இருக்குமா என்றால், இருக்காது, ஒருலட்சம் மட்டுமே செலவாகியிருக்கும். ஆ அட்டவணை சொத்தின் ஒருபகுதியை என் திருமண செலவினங்களுக்காகவே 4ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து விற்றார்கள் என்றால் சரியல்ல. என் திருமண செலவினங்கள் பொருட்டு என் பெற்றோர் எவ்வாறு தொகைளை ஏற்பாடு செய்தார்கள் என்பதை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை, கடன் வாங்கிதான் திருமணம் செய்துவைத்தார்கள். வா.சா.ஆ.5ன்படி 4ம்பிரதிவாதிக்கு என் தாயார் சொத்தை விற்ற விவரம் எனக்கு

நன்றாகவே அந்த சமயத்திலேயே தெரியும் என்றும், என் கணவரே சாட்சியாக இருந்து கிரயத்தில் கையெழுத்து செய்துள்ள நிலையிலும் மீடியேட்டராக இருந்து செயல்பட்டுள்ளார் என்றும் எனவே எனக்கு எதுவும் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 -ன்படி இரண்டு லட்சத்திற்குசொத்தை விற்றும், மேலும் ஒரு லட்சம் கடன் பெற்று என் திருமணத்தை சிறப்பாக பெற்றோர் செய்து வைத்தனர் என்று சொன்னால் சரியல்ல. என் திருமண செலவினை ஈடுகட்டும் பொருட்டே ஆ அட்டவணை சொத்தின் ஒரு பகுதி 4ம் பிரதிவாதிக்கு விற்கப்பட்டது என்றும் அதன் விவரம் எனக்கு அந்த சமயத்திலேயே தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. எனது திருமணம் சாதாரணமாகதான் பெரும் செலவின்றி நடைபெற்றது. தாவா தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம் மாவட்டம், (இருப்பு) செங்கல்பட்டு

| வழக்கு எண் | O.S. | 84 | of | 2013 |
|---|---|---|---|---|

நாள் 06.10.2020 - வா.சா. 1 திருமதி நித்யகல்யாணி

சாட்சி மீண்டும் முன்னிலையாகி பிரமாணம் செய்விக்கப்பட்டு தொடர்ந்து விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை தொடர்ச்சி.

எனது தரப்பிலான முதல் விசாரணையை ஏற்கனவே பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து ஏற்றுகொள்ளப்பட்டுள்ள நிலையில் இன்று என் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| 10.11.1987 | புல எண் 287-ன் வரைபடம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. |
| | **அ** பதிவேட்டின் நகல் வா.சா.ஆ2. |
| | எனது தந்தை வழி தாத்தா (பாட்டனார்) ராஜகோபால் நாயக்கர் பெயரில் உள்ள அடங்கல் வா.சா.ஆ.3. |
| 26.02.2004 | 3ம் பிரதிவாதிக்கு முதல் பிரதிவாதி செய்துகொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. |
| 24.02.2005 | 4ம் பிரதிவாதிக்கு, 3ம் பிரதிவாதி எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. |
| 28.02.2012 | அசல் வழக்கு எண் 265/2006-ல் இடைநிலை மனு எண் 1193/2010 என்பதில் வழங்கிய இறுதநிலை தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. |
| 04.05.2012 | 3ம் பிரதிவாதிக்கு முதல் பிரதிவாதி எழுதிகொடுத்த செட்டில்மென்ட் பத்திரம் பதிவு எண் 3528/2012-ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 |
| 04.05.2012 | 2ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதி எழுதிகொடுத்த தான செட்டில்மென்ட் பதிவு எண் 3529/2012-ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8. |
| 17.04.2013 | இணை சார் பதிவாளர் எண் 1 -க்கு வாதி அனுப்பிய புகாரின் நகல் வா.சா.ஆ.9 |

09.04.2013 அ அட்டவணை சொத்தின் வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.10

09.04.2013 ஆ அட்டவணை சொத்தின் வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.11.

தாவாவை அனுமதித்து உத்தரவிட வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம் மாவட்டம், (இருப்பு) செங்கல்பட்டு

| வழக்கு எண் | O.S. | 84 | of | 2013 |
|---|---|---|---|---|

2019-ம் ஆண்டு திங்கள் ஆம் நாளான இன்று

வாதி / பிரதிவாதி
மனுதாரர் / எதிர்மனுதாரர் தரப்பில் -வது சாட்சியின் வாக்குமூலமானது 1973-ம் ஆண்டின் 10-வது சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | தந்தை பெயர் | |
| | | கணவர் பெயர் | |
| கிராமம் | | தாலுகா | |
| ஜாதி | | சமயம் | |
| தொழில் | | வயது | |

---

நாள் 11.12.2019 - வா.சா. 1 திருமதி நித்யகல்யாணி

முதல் விசாரணை

எனது சாட்சிய வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் என் வழக்கறிஞருக்கு அளித்த விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அந்த பிரமாணவாக்குமூல விவரம் எனக்கு கூறப்பட்டது. அதனை விளக்கி கூற புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன்.

(ஆவணங்களை குறியிட வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது)